பக்கங்கள்:11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 09 ஞாயிற்றுக்கிழமை 25.08.2024 கதிர் 291

# நாட்டை வழி நடத்த சஜித்துக்கு தெரியாது

## எனவே அவரை துடைத்தெறியுங்கள்; மட்டக்களப்பில் ரணில் நேற்று ஆவேசம்

நாட்டை வழி நடத்தும் முறை சஜித்துக்கு தெரியாது.நாம்அதற்கானமுயற்சிகளைசெய்த போதும்எமக்குஉதவமுன்வரவில்லைஎனவே தேர்தலில் அவர்களைத் துடைத்தெறியுங்கள் என்று தெரிவித்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

மட்டக்களப்பு, கல்லடி சிவானந்தா தேசிய பாடசாலை விளையாட்டரங்கில் நேற்று முற்பகல் நடைபெற்ற மட்டக்களப்பு மாவட்ட 'இயலும் ஸ்ரீலங்கா' பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

இந்த மேடையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு ரோயல் கல்லூரியில் கற்பித்தவரான ஆசிரியர் சிவலிங்கமும் அமர்ந்திருந்தார். அங்கு உரையாற்றிய ரணில் விக்கிரமசிங்க தெரிவித்ததாவது:

இந்த மேடையில் எனக்கு ரோயல் கல்லூரியில் கற்பித்த சிவலிங்கம் ஆசிரியர் இருக்கிறார். 13, 14 வயதில் அவரிடம் கல்வி கற்றேன். 1960களில் நானும் பிரதமர் தினேஷ் குணவர்தனவும் அவரிடம் கற்றிருக்கிறோம். எனவேநாட்டைமீட்டெடுத்தபெருமையை ☞ 2

## இனிது ரகசியம் அல்ல!

பொது வேட்பாளர் விடயத்தில் தமிழ்த் தேசியம் பேசும் அரசியல் கட்சிகள் ஏன் உள்ளே வந்தன என்கிற சாயம் மெல்ல மெல்ல வெளுக்கத் தொடங்குகின்றது. வவுனியாவில் நேற்றுக்கூடிய ரெலோவின் கூட்டத்தைத்தொடர்ந்து அதன்பேச்சாளர்சுரேந்திரன்குருசாமி நடத்திய ஊடகச்சந்திப்பில் இதற்கான அறிகுறிகள் காணப்பட்டன.

தமிழ் பொது வேட்பாளருக்கு வாக்களிப்பவர்கள்தமதுஇரண்டாவது விருப்பு வாக்கை யாருக்குப் போடுவது என்பது தொடர்பில் ஆராயப்படவேண்டிய நிலைப்பாடு நோக்கிபொதுக்கட்டமைப்பைஉந்தித் தள்ளும்போக்கில்அவர்களதுபயணம் இருக்கின்றதுஎன்பதைசுரேந்திரனின் கருத்துக்கள் உணர்த்துகின்றன.

"நாம் முன்வைக்கும் கோரிக்கைகைளை எவ்வளவு தூரம் அவர்கள் (ஜனாதிபதி வேட்பாளர்கள்) ஏற்றுக்கொண்டுள்ளார்கள்என்பதைபொறுத்துத்தான் இரண்டாவது விருப்பு வாக்கு தொடர்பில் தீர்மானிக்க முடியும்" என்றார் அவர்.

இதே இரண்டாவது வாக்கு விடயத்தைதமிழ்மக்கள்கூட்டணித் தலைவர்விக்னேஸ்வரனும்முதலில் வலியுறுத்தி வந்தார். பின்னர் பொதுக்கட்டமைப்புத்தன்னைப் ☞ 2

## வேட்பாளர்களின் மாத வருமானம்

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்களின் மாதாந்த வருமானம்வெளியிடப்பட்டுள்ளது. அதிக மாத வருமானம் பெறும் வேட்பாளர் திலித் ஜயவீர எனவும், குறைந்த மாத வருமானம் பெறும் வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலஞ்சம், ஊழல் மற்றும் சொத்துக்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது. அதன் அடிப்படையில், அதிக வருமானம் பெறும் பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களின் பட்டியலில் முதலாம் இடத்தை பிடித்துள்ளார் ஜன அதிகாரத்தின்கீழ்போட்டியிடும்மௌபிம ஜனதா கட்சித் தலைவர் வர்த்தகர் திலித் ஜயவீரவின் மாத வருமானம் 1 கோடியே 65 இலட்சம் ரூபாய் ஆகும். ☞ 8

## தேர்தல் விதி மீறல்கள் தொடர்ந்து அதிகரிப்பு

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்துச் செல்வதாக தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

ஒரே நாளில் மாத்திரம் தேர்தல் சட்ட விதிகளை மீறியதாககூறப்படும் 65 தேர்தல் முறைப்பாடுகள்பதிவாகியுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு நேற்றுச் சுட்டிக்காட்டியது.

அதற்கமைய, கடந்த ஜூலை 31 ஆம் திகதி முதல் நேற்று வரையான காலப்பகுதியில் தேர்தல் தொடர்பில் 901 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

## மூத்தோர் வைப்புகளுக்கு மீண்டும் 15 சதவீத வட்டி

### அக்ரஹாரா'வும் தரப்படும் என்கிறார் சஜித்

வயதில் மூத்தவர்களின் சேமிப்பு கணக்குகளுக்கு மீண்டும்15சதவீதவட்டியை வழங்குவோம். இந்த வட்டியைக் குறைத்ததன் மூலம் இலட்சக்கணக்கான ஓய்வூதியதாரர்களின்உரிமை இன்று பறிக்கப்பட்டுள்ளது. இந்த ஆளும் தரப்பு அவர்களை ஏமாற்றினாலும் நாம் அவர்களை ஏமாற்றப் போவதில்லை. 2016 ஆம் ஆண்டுக்குமுன்பூஓய்வுபெற்ற அனைவரும் அக்ரஹார காப்புறுதித் திட்டத்திற்குள் உள்வாங்கப்படுவர் என்றார் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச.

ஐக்கிய மக்கள் கூட்டணியின்12ஆவதுபரப்புரைக் கூட்டம்நேற்றுக்காலைகண்டி திகனவில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போது எதிர்க்கட்சித் தலைவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது:

அரச படையினருகாக வன் ராங் வன் பே (One rank one pay) வேலை திட்டம் முன்னெடுக்கப்படும். கல்வித்துறையில் ☞ 8

## 75 சதவீத மேலதிக வாக்குகளால் மட்டக்களப்பில் ரணில் வெல்வார்

### இப்படிச் சொல்கிறார் அமைச்சர் பந்துல

மட்டக்களப்புப்பிரதேசத்தில்75சதவீதமேலதிக வாக்குகளினால் ரணில் விக்ரமசிங்க வெற்றி பெறுவார். பிள்ளையானின் கட்சி, அதாவுல்லாவின் கட்சி உட்பட சிறுபான்மை கட்சிகள் இணைந்து ரணில் விக்கிரமசிங்கவுக்கே ஆதரவுவழங்குகின்றன. அவரை அன்றி, தாய் நாட்டை மீள கட்டியெழுப்பும்திட்டத்தைவெல்ல வைப்பதற்காகவேமக்கள் வாக்களிக்கின்றனர் என்றார் அமைச்சர் பந்துல குணவர்த்தன.

ரணிலுக்குஆதரவாக மட்டக்களப்பில் நேற்று நடந்த, ஜனாதிபதிக்கு ஆதரவான பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போது அவர்இதனைத்தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த காலத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள்வீதியில்கொல்லப்பட்டனர்.வீடுகள் எரிக்கப்பட்டன.நாட்டை பங்களாதேஷாக மாற்ற முயன்றார்கள். ஜனநாயகத்தை பாதுகாக்கவும் மனித உயிர்களைக் காக்கவும் ரணில் விக்ரமசிங்க நடவடிக்கை எடுத்தார். ஜனநாயகத்தை பாதுகாக்கத் தவறிய சஜித்திற்கோ அநுரவுக்கோ தேர்தலில் போட்டியிடஎந்ததார்மீக உரிமையும் ☞ 8

## எமக்கு பாதுகாப்பு வேண்டாம் 20 வேட்பாளர்கள் அறிவிப்பு

ஜனாதிபதித்தேர்தலில் போட்டியிடும் 39 பேரில் இருபது வேட்பாளர்கள் தமக்கு பாதுகாப்புத் தேவையில்லை என்று அறிவித்துள்ளனர்என்று சிங்கள ஊடகம் ஒன்று செய்திவெளியிட்டுள்ளது.

தேர்தல் முடியும் வரையில் வேட்பாளர்களுக்குப் பாதுகாப்பளிக்க முடிவு செய்யப்பட்டிருந்தது. இதன் அடிப்படையில் பாதுகாப்புக் கேட்ட வேட்பாளர்களுக்கு அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தஆண்டு ☞ 8

### கோட்டாவை வெல்லவைத்ததற்காக வெட்கித் தலைகுனிந்தேன்

## நன்றி மறந்துவிடாமல் ரணிலுக்கு மீண்டும் வாய்ப்புத் தரவேண்டும்

### பிள்ளையானின் ஆதங்கம் இது

"எந்நன்றி கொன்றார்க்கும்உய்வுண்டாம் உய்வில்லைசெய்நன்றி கொன்ற மகற்கு" என்ற திருக்குறளின் படி நாம் நன்றி மறவாது ரணில் விக்ரமசிங்கவுக்கு மீண்டும் ஒரு தடவை சந்தர்ப்பம் வழங்க வேண்டும். நாட்டை மிகவும் இக்கட்டான நிலையிலிருந்துமீட்டவர் அவர். ஜனநாயகத்தை நம்பி ஆயுதங்களை விட்டு வந்த எமக்கு தலைகுனிந்து நிற்கும் நிலை ஏற்பட்டது. கோட்டாபயவை ☞ 8

## சிலிண்டருக்கு வாக்களிக்காவிட்டால் காஸ் இன்றி துன்பப்படவேண்டிவரும்

### தம்புள்ளையில் ஜனாதிபதி மிரட்டல்

தேர்தல் நடத்த எதிர்க்கட்சிகளேகோரின. மக்கள் வாழ்க்கையைக் குழப்புவதே எதிர்கட்சியினருக்குத்தேவையாகவுள்ளது. எனக்கு எதிராக நீதிமன்றத் தீர்ப்பை பெற்றுள்ளனர். மக்களுக்காக எதையும் செய்வேன். செப்டெம்பர்21 சிலிண்டர்சின்னத்துக்கு வாக்களியுங்கள். இல்லாவிட்டால் எதிர்காலத்தில் கேஸ் இல்லை என்று கவலைப்பட நேரிடும் என்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

தம்புள்ளை பொது சந்தை கட்டிடத்தொகுதி வளாகத்தில் இன்று நடைபெற்ற 'இயலும் ஸ்ரீலங்கா' மாத்தளை மாவட்டப் பரப்புரையில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்ரம சிங்க இதனைத் தெரிவித்தார். அவர்அங்கு மேலும்தெரிவித்ததாவது:

தொலைநோக்குப் பார்வையும் வேலைத் திட்டமும் இல்லாமல் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்தை மாத்திரம் கொண்டகுழுவினரிடம் இந்நாட்டை ஒப்படைத்தால் நாடு அழிவதைத் தடுக்க முடியாது. எனவே இவ்வருட ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் கடந்த இரண்டு வருடங்களாக கஷ்டப்பட்டு ☞ 8

## உள்ளாட்சி சபை தேர்தல்; அடுத்த வாரம் கலந்தாய்வு

### தேர்தல் ஆணைக்குழுத் தலைவர் தெரிவிப்பு

உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை நடத்தும்படி தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கும் நிலையில், அது குறித்து அடுத்தவாரம் ஆணைக்குழு கூடிக் கலந்துரையாடவுள்ளது என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

உள்ளூராட்சி சபை தேர்தலுக்குதேவையான பணம்தற்போதும் ☞ 2

## இனி இது .....

பொது வேட்பாளராகத் தெரிவு செய்யவில்லை என்றதன் பின்னர் அவர் அதனை வலியுறுத்துவதை மெல்லக் குறைத்துக்கொண்டார்.

இப்போது ரெலோ என்ன சொல்கிறது என்றால், தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தியதனால் கடும் அழுத்தங்களுக்கு உள்ளாகியிருக்கும் ஜனாதிபதி வேட்பாளர்கள் தொடர்ந்தும் பேசுவதற்குத் தமக்கு அழைப்பு விடுக்கிறார்கள், தாம் தொடர்ந்தும் அவர்களுடன் பேசுவோம், அத்தகைய பேச்சுக்களில் அவர்கள் (வேட்பாளர்கள்) பொதுவேட்பாளருக்கு தமிழ் மக்கள் அதிகபட்ச வாக்குகளை வழங்கினால் தங்களுக்கு இரண்டாவது கணக்கீட்டில் கூட வெற்றி இல்லாத நிலை வரலாம் என உணர்கிறார்கள் என்கிறது.

இந்தப் பின்னணியில் என்ன செய்வது என்பது குறித்துத்தான் ரெலோவின் மத்திய குழு நேற்றுக் கூடிப் பேசி இருக்கின்றது.

மறுபுறத்தில் தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பில் சம பங்காளிகளாக இருக்கும் தமிழ் மக்கள் பொதுச் சபையினரோ, ஜனாதிபதி மற்றும் எதிர்க் கட்சித் தலைவரின் அழைப்பை ஏற்று அவர்களுடன் பேசுவதற்கு ரெலோ, புளொட், ஜனநாயகப் போராளிகள் கட்சி ஆகியன சென்றமை தவறு என்கிறது. அப்படி அவர்கள் போனது தொடர்பாக அந்தக் கட்சிகளிடம் பொதுக் கட்டமைப்பின் தலைமைக்குழுக் கூட்டத்தில் கேள்வி எழுப்பப்படும் என்று அதன் உறுப்பினரான சட்டத்தரணி யோதிலிங்கம் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்தார்.

இதுபோன்ற சந்திப்புக்களுக்கோ பேச்சுக்களுக்கோ பொதுக் கட்டமைப்பாகத்தான் செல்வது என்று புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட பின்னர், ரணில் மற்றும் சஜித்தின் பேச்சுக்கான அழைப்பை ஏற்பதில்லை என்று பொதுக் கட்டமைப்புத் தீர்மானித்த நிலையில் கட்சிகள் அப்படிப் பேச்சுக்குச் சென்றிருக்கக்கூடாது என்பதே அவர் தெரிவிக்கும் நிலைப்பாடு.

ஆனாலும் இது தொடர்பில் கடுமையான நடவடிக்கைகளுக்குப் போக தமிழ் மக்கள் பொ-துச் சபையினர் விரும்பவில்லை. தமிழ் பொது வேட்பாளர் என்கிற காவடியைத் தூக்கித் தலையில் வைத்துவிட்டார்கள். அதனை எப்படியாவது ஆடி இறக்கிவிடவேண்டும் அதற்கிடையில் கட்சிகளைக் குழப்பி கட்டமைப்பைச் சிதறப்பண்ணிவிடாமல் பார்த்துக்கொள்ளவேண்டும் என்பதே அவர்களின் இப்போதைய தேவையாக இருக்கின்றது. எனவேதான் அவர்கள் கட்சிகளுக்கு எதிராகக் கடுமையான நிலைப்பாடுகளை எடுக்க அச்சப்படுகிறார்கள்.

இதனைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு, பொதுச் சபையினரின் முயற்சிகளையும் உழைப்பையும் பயன்படுத்திக் கொண்டு தமது அரசியல் நலன்களை எப்படி வெல்வது என்பதில் அரசியல் கட்சிகள் குறியாக இருக்கின்றன. இந்த இழுபறி நிலை எவ்வளவு தூரம் போகும் என்பது இன்னும் தெளிவாகவில்லை. இன்னும் ஓரிரு நாள்களில் அது தெரியவரும் என்று எதிர்பார்க்கலாம்.

தமிழ் பொது வேட்பாளர் விவகாரம் குறித்தும் அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்த சுவிஸ் தூதுவரைச் சந்திப்பதற்கு ரெலோ மற்றும் ஜனநாயகப் போராளிகள் கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்படாதது பற்றியும் இன்று கூடிப் பேசுவது என்று ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி முடிவு செய்துள்ளது. கூட்டணிக் கட்சிகளில் ஒன்றான தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் சிறீகாந்தா சுகவீனம் காரணமாக வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டிருக்கும் நிலையில் அவர் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளமாட்டார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. மற்றவர்கள் இடையில் ரெலோ, புளொட், ஜனநாயகப் போராளிகள் ஒரு தரப்பாகவும் ஈபிஆர்எல்எவ் மற்றொரு தரப்பாகவும் பிரிவுண்டு கடும் வார்த்தைப் போருக்கான வாய்ப்பு இருப்பதாக உள்வீட்டுத் தகவல்கள் கூறுகின்றன.

தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவதில் ஈபிஆர்எல்எவ் தொடர்ந்தும் தீவிரமாக இருக்கின்றது. களத்திலும் இறங்கி வேலை செய்து வருகின்றது. இருந்தாலும் தமிழ் மக்கள் பொதுச் சபையுடன் அதற்கும் நெருடல்கள் இருக்கத்தான் செய்கின்றன. அரசியல் கட்சிகள் எதைச் செய்தாலும் அதைப் பொதுக் கட்டமைப்பின் ஒரு தரப்பாக இருக்கும் பொதுச் சபையின் அனுமதி பெற்றுத்தான் செய்யவேண்டும் என்பதில் உரசல்களும் முரண்பாடுகளும் தோன்றுகின்றன. பொது வேட்பாளரை ஆதரித்து அச்சடிக்கப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் தொடர்பாகவும் இதுபோன்ற உரசல் அண்மையில் ஏற்பட்டுள்ளது. கடைசியில் பொதுச் சபையினரின் கருத்துக்களைத் தூக்கி எறிந்துவிட்டு ஈபிஆர்எல்எவ் தன் விருப்பப்படிதான் நடந்துகொண்டுள்ளது.

இப்படி இடியப்பச் சிக்கலாகிக் கொண்டிருக்கும் பொதுக் கட்டமைப்புக்கு மத்தியில் வீதியில் இறக்கிவிடப்பட்டிருக்கும் அரியநேத்திரனுக்கு ஆதரவாக இப்போதைக்கு தமிழ்த் தேசியப் பசுமை இயக்கமும் ஈபிஆர்எல்எவ்வும்தான் இருக்கின்றன. ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் இன்றைய கூட்டம்தான் மற்றைய கட்சிகளும் இந்தப் பரப்புரையில் தொடர்ந்து பங்கேற்கப் போகின்றனவா இல்லையா என்பதைத் தீர்மானிக்கப்போகின்றது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## நாட்டை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவருக்கும் கொடுக்க வேண்டியது அவசியமாகும்.

முன்னாள் சபாநாயகர் அனுர பண்டாரநாயக்கவும் மலிக் சமரவிக்ரமவும் சிவலிங்கம் ஆசிரியரிடம் கல்வி கற்றுள்ளனர். ஏதென்ஸ் சாம்ராஜ்ஜியத்தில் இளையோரின் எழுச்சி குறித்து ஆசிரியர்ளங்களுக்குக் கற்பித்தது நினைவிருக்கிறது. அச்சமடைந்த நாட்டுக்குள் மக்கள் நம்பிக்கை இழக்கும் வகையில் செயற்படக்கூடாது என்பதை வலியுறுத்தினார். அதனால் தான் 2022 ஆம் ஆண்டில் சவால் மிக்க தருணத்தில் எவரும் ஏற்காத நாட்டை நான் பொறுப்பேற்றேன்.

உங்களுக்காக போராடவும், உங்களுக்கு சலுகை வழங்கவும், அடுத்த தலைமுறைக்கு நல்ல எதிர்காலத்தை வழங்கவும், நாட்டின் பிரச்சினைகளைத் தீர்க்கவும், நாட்டுக்குள் நிலைபேற்றுத் தன்மையை ஏற்படுத்தவும், நாட்டை சரியான பாதைக்கு கொண்டு செல்லவும் என்னால் தலைமைத்துவம் வழங்க முடிந்தது என்பதாலேயே 'இயலும் ஸ்ரீலங்கா' என்று சொல்கிறோம்.

கஷ்டமான காலத்தில் இந்தப் பொறுப்புக்களை நான் ஏற்றுக் கொண்டேன். எதிர்க்கட்சித் தலைவருக்கு இந்த ஆசான் கிடைக்கவில்லை. அதனால்தான் சவால்களை ஏற்காமல் அவர் ஓடிவிட்டார். பாரிஸ் ஒலிம்பிக் வரையில் அவர் ஓடி முடித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் மாற்றுப் பிரதமர் ஆவார். மக்களைப் பாதுகாக்கும் பொறுப்பு அவரையும் சார்ந்துள்ளது. ஆனால் மக்கள் கஷ்டப்படும்போது ஓடி மறைந்து கொண்டார். வரிசைகள் பற்றி யோசிக்கவில்லை, மக்கள் பசியை பற்றி சிந்திக்கவில்லை. அனுர குமாரவும் ஓடி மறைந்து கொண்டார். ஆனால் அன்று இங்கு இருக்கும் அமைச்சர்கள் ஓடாமல் இருந்தனர்.

நாம் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாடினோம். கஷ்டமான பல தீர்மானங்களை எடுக்கவேண்டியிருந்தது. உள்நாட்டு கடன்பெறுதல் வரையறுக்கப்பட்டது. பணம் அச்சிடுவது நிறுத்தப்பட்டது. செலவுகளைக் குறைத்து எதிர்கால நடவடிக்கைகளுக்கு வருமானம் தேட வற் (ருவீ) வரியை அதிகரித்தோம். அவை இலகுவான பணியல்ல.

அமைச்சரவையில் பல முறை பேசினோம். மக்கள் கஷ்டங்களை தாங்கிக்கொண்டமைக்கு நன்றி தெரிவிக்கிறோம். 2022 ஆம் ஆண்டில் மொத்தத் தேசிய உற்பத்தி 13 பில்லியன் டொலர் சரிவைக் கண்டது. எவ்வாறாயினும் எமது முயற்சிகளால் 2023 இல் 8 பில்லியன் டொலர்களினால் மொத்த தேசிய உற்பத்தியை அதிகரித்தோம். இதனால் ரூபாயின் பெறுமதி அதிகரித்தது. அஸ்வெசும நலன்புரித் தொகை வழங்கினோம். இவ்வருடத்தில் 24 இலட்சம் பேருக்கு அஸ்வெசும வழங்கவுள்ளோம். சிறுநீரக நோயாளர்கள் மற்றும் வயோதிபர்களுக்கான கொடுப்பனவும் அதிகரிக்கப்பட்டது.

11 பில்லியன் ரூபாய் செலவில் இலவசமாக அரிசி வழங்கினோம். அரச ஊழியர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் சம்பள அதிகரிப்பு வழங்கினோம். அடுத்த வருடத்தில் அரச ஊழியர்களுக்கு உதயசெனவிரத்ன அறிக்கையின்படி 25 ஆயிரம் ரூபா வாழ்க்கைச் செலவு கொடுப்பனவை வழங்குவோம். அதனால் அரச ஊழியர்களின் அடிப்படைச் சம்பளம் 55 ஆயிரமாக அதிகரிக்கும். ஓய்வூதியம் பெறுவோருக்கும் 3000 ரூபா இடைக்கால கொடுப்பனவு வழங்கப்பட்டது. முதியோருக்கான நிலையான வைப்பு வட்டி வீதம் 10 ஆக அதிகரிக்கப்படும். மக்களுக்கு இலவச காணி உறுதிகளை வழங்குகிறோம். 20 இலட்சம் பேர் இதனால் பயனடைவர். அடுக்குமாடிக் குடியிருப்பு வீட்டு உரிமைகளை மக்களுக்கு கொடுப்போம். பெருந்தோட்டங்கள் கிராமங்களாக மாற்றப்படும். 'உறுமய' வேலைத் திட்டத்திற்கு தனியான ஒரு ஆணைக் குழு அமைக்கப்படும். அதனால் அடுத்த மூன்று வருடங்களில் அந்த வேலைத்திட்டம் முழுமைப் படுத்தப்படும்.

2 வருடங்களில் எந்த ஆளும் தரப்பும் செய்ய முடியாததை செய்தோம். அதுவே முன்னேற்றம். 2022 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரையில் சிவப்புப் பருப்பு விலை 41 ரூபாவினால் குறைந்துள்ளது. கோதுமை மா 29 ரூபாவினால் குறைந்துள்ளது. கோழி இறைச்சி விலை 11 சதவீதத்தினால் குறைந்திருக்கிறது. டீசல் 28 வீதமாக குறைந்துள்ளது. கேஸ் 31 சதவீதமாக குறைந்துள்ளது. டீசல் 450 ரூபாவில் இருந்து 318 ரூபாவாகக் குறைந்திருக்கிறது. குறைந்தபட்ச பஸ் கட்டணம் 40 இல் இருந்து 28 ரூபாய் வரையில் குறைந்துள்ளது. மக்களின் வாழ்க்கைச் சுமை குறைந்துள்ளது. அதனாலேயே சிலிண்டர் சின்னத்தை தெரிவு செய்தேன்.

மேலும் பல சலுகைகள் தேவைப்படுகின்றன. அதற்காக ரூபாவை வலுப்படுத்தவேண்டும். 2025 ஆம் ஆண்டில் அதனைச் செய்து அதிக சலுகைகளை வழங்குவோம். இன்னும் ஒரு வருடம் பாடுபட்டால் நல்ல பயன்களை அடையலாம். பொருட்களை அதிகளவில் இறக்குமதி செய்யலாம். மருந்து தட்டுப்பாட்டை குறைக்கலாம். பொருளாதாரம் மேம்படும். ஏற்றுமதித் துறை பலப்படும். சுற்றுலாத் துறை மேம்படும். வெருகல் - மட்டக்களப்பு வரையில் சுற்றுலா அபிவிருத்தி செய்யப்படும். சிறிய - பெரிய ஹோட்டல்கள் அமைக்கப்படும். கல்முனை - அருகம்பே வரையில் சுற்றுலாத்துறை பலப்படுத்தப்படும். இதனால் மக்களுக்கும் பல வாய்ப்புகள் உருவாகும்.

விவசாயம் நவீனமயப்படுத்தப்படும், மீன்பிடித்துறையும் நவீனமயப்படுத்தப்படும், வீடுகளின் வருமானம் அதிகரிக்கும், கல்குடாவை அபிவிருத்தி செய்வோம். அதனால் நாம் கடன் பெற்ற 18 தரப்பினருடன் வங்குரோத்து நிலையிலிருந்து மீள்வதற்கான ஒப்பந்தம் செய்துள்ளோம். கடனை மீளச் செலுத்த காலம் வழங்கியுள்ளனர். 10 பில்லியன் டெலர் கடன் சலுகை கிடைத்துள்ளது.

சஜித் இந்த முறையை மாற்றப் போவதாக சொல்கிறார். இவற்றை மாற்றினால் சலுகைகள் நிறுத்தப்படும். ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடையும். 400 ரூபா வரையில் டொலரின் பெறுமதி அதிகரிக்கும். கேஸ் இருக்காது. நாட்டை வழி நடத்தும் முறை சஜித்துக்கு தெரியாது. நாம் அதற்கான முயற்சிகளை செய்த போதும் எமக்கு உதவ முன்வரவில்லை. உங்களுக்கு சலுகைகளை வழங்க முயற்சித்தோம். அதற்கிடையில் தேர்தல் நடத்தவில்லை என்று எனக்கெதிராக வழக்குத் தொடுத்தனர். தேர்தல் நடத்தியிருந்தால் அதற்கே 3, 4 மாதங்களைச் செலவிட வேண்டியிருந்திருக்கும்.

2022 ஒவ்வொரு நொடியும் நாம் பாடுபட்டதாலேயே இன்றைய நிலை எட்டப்பட்டிருக்கிறது. எந்த ஒரு நாடும் இவ்வளவு விரைவில் மீண்டு வந்ததில்லை. அதனைத் தடுப்பதே எதிர்க் கட்சியின் தேவையாகும். எனக்கு எதிராக நீதிமன்றத் தீர்ப்பை பெற்றுள்ளனர். மக்களை வாழவைப்பது அடிப்படை உரிமை மீறல் என்று நான் நினைக்கவில்லை. மக்களுக்காக முன்வந்து கஷ்டப்பட நான் தயார். அடுத்த தலைமுறைக்கு சுபீட்சமான எதிர்காலத்தை உருவாக்குவதே எனது தேவையாகும். எனவே தேர்தலில் அவர்களை துடைத்தெறியுங்கள். நாம் ஒற்றுமையாக முன்னேறுவோம் .நாட்டையும் முன்னேற்றுவோம். சிறந்த தொரு எதிர்காலத்தை நான் உருவாக்குவேன்.

2019 ஆம் ஆண்டில் இருந்ததை விடவும் நல்ல நிலையை உருவாக்குவேன். எதிர்காலத்தைப் பாதுகாக்க முன்வாருங்கள். செப்டெம்பர் 21 ஆம் திகதி சிலிண்டருக்கு வாக்களியுங்கள். இல்லாவிட்டால் சிலிண்டர் இன்றி அல்லல்பட நேரிடும் - என்றார்

## உள்ளாட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இல்லை என்பதைச் சுட்டிக்காட்டிய தேர்தல் ஆணைக்குழு தலைவர் ஆர்.எம்.எல்.ஏ ரத்னாயக்க, எனினும் நீதிமன்றத் தீர்ப்பைச் செயற்படுத்தும் விதம் குறித்துக் கலந்துரையாடப்படவுள்ளது என்று தெரிவித்தார்.

உள்ளூராட்சி சபை தேர்தலுக்கான அடிப்படை செலவுகள் தவிர ஏனைய செலவுகள் குறித்து திறைசேறி பரிசீலித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

உள்ளூராட்சிசபை தேர்தலுக்காக வேட்புமனு தாக்கல் செய்த சில வேட்பாளர்கள் நாட்டை விட்டு வெளியேறிவிட்டனர். மேலும் சில வேட்பாளர்கள் இறந்துவிட்டனர். இந்த நிலையில் ஏற்கனவே பெறப்பட்ட வேட்புமனுக்களுக்கு ஏற்ப தேர்தலை நடத்தமுடியுமா என்று ஆராயவேண்டி உள்ளது. அதனால் உள்ளூராட்சிசபை தேர்தல் குறித்து சிறப்பு கலந்துரையாடல் ஒன்றை அடுத்தவாரம் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது - என்று மேலும் தெரிவித்தார் தேர்தல் ஆணைக்குழு



# தபால்மூல வாக்கைப் பெறுவதற்காக வேட்பாளர் அரச ஊழியர்களை ஏமாற்ற முயல்கிறார்களா?

ஜனாதிபதித் தேர்தலுக்கான அரச ஊழியர்களது தபால்மூல வாக்களிப்புக் காலம் நெருங்கிவருகின்ற இவ்வேளையில், 'அரச ஊழியர்களின் ஆகக் குறைந்த அடிப்படைச் சம்பளம் 55,000 ரூபாவும் அதனுடன் வாழ்க்கைச் செலவுப் படி 25,000 ரூபாவும் வழங்கப்படும்' என சிலிண்டர்ச் சின்ன வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவும், 'அரச ஊழியர்களின் ஆகக் குறைந்த அடிப்படைச் சம்பளம் 57,000 ரூபாவும் அதனுடன் வாழ்க்கைச் செலவுப் படி 25,000 ரூபாவும் வழங்கப்படும்' என மணிக்கூண்டுச் சின்ன வேட்பாளர் சஜித் பிரேமதாசாவும் என அரச ஊழியர்களை நோக்கி வாக்குறுதிகளை அள்ளி வீசி வருகின்றார்கள்.

இவ்விரு வேட்பாளர்களும் கூறுவதைப் நோக்கும்போது, ஜனாதிபதி வேட்பாளர் ரணில் வக்கிரமசிங்க கூறியதன் படி ஆரம்ப தரநிலையிலுள்ள அரச ஊழியர் ஒருவருக்கு அடிப்படைச் சம்பளம் 55,000 ரூபாவும் வாழ்க்கைச் செலவுப் படி 25,000 ரூபாவும் சேர்த்து 80,000 ரூபாவும் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசா கூறியதன் படி ஆரம்ப தரநிலையிலுள்ள அரச ஊழியர் ஒருவருக்கு அடிப்படைச் சம்பளம் 57,000 ரூபாவும் வாழ்க்கைச் செலவுப் படி 25,000 ரூபாவும் சேர்த்து 82,000 ரூபாவும் வழங்கப்படவேண்டும். இத்தொகையினுள் அரச ஊழியர்களுக்கு சம்பளத்துடன் வழங்கப்படும் ஏனைய படிகளான 5,000 ரூபாவும் 2,500 ரூபாவும் உள்ளடக்கப்படவில்லை.

மேற்படி பிரதான இரு வேட்பாளர்களும் அரச ஊழியர்களது அடிப்படைச் சம்பளம், வாழ்க்கைச் செலவுப் படி என்பன தொடர்பில் தெளிவடைந்து தமது தெளிவான நிலைப்பாட்டை முன்வைக்க வேண்டுமென பலராலும் எதிர்பார்க்கப்படுவதுடன் தபால் மூல வாக்களிப்புத் திகதி நெருங்கி வருவதால் தற்போதைய நிலையில் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள அரச ஊழியர்களது வாக்குக்களைப் பெற்றுக்கொள்வதற்காக அரச ஊழியர்களது அடிப்படைச் சம்பளம், வாழ்க்கைச் செலவுப் படி அதிகரிப்புத் தொடர்பில் தெளிவற்ற குழப்பகரமான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுப் பொய்ப் பிரசாரம் முன்னெடுக்கப்பட்டுள்ளதா எனவும் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

(05)

# ரணில் விக்கிரமசிங்கவுக்கே வாக்களிக்க வேண்டும்

**புனர்வாழ்வு அளிக்கப்பட்ட விடுதலைப் புலிகள் கட்சி கோரிக்கை**



*ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் பேசியே எமது பிரச்சனைகளை தீர்க்கமுடியும். முன்னாள் போராளிகள் தொடர்பான 5 கோரிக்கைகளை ஜனாதிபதி ஏற்றுக் கொண்டுள்ளார். அதனால் ஜனாதிபதி தேர்தலில் எமது ஆதரவு ரணிலுக்கே என புனர்வாழ்வு அளிக்கப்பட்ட விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் இன்பராசா தெரி வித்துள்ளார்.*

*புனர்வாழ்வு அளிக்கப்பட்ட விடுதலைப்புலிகள் கட்சியின் ஊடக சந்திப்பு நேற்று(சனிக்கிழமை) வவுனியா, இரண்டாம் குறுக்குதெருவில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் இடம்பெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.*

*அவர் மேலும் தெரிவிக்கையில் -*

*புனர்வாழ்வு அளிக்கப்பட்ட விடுதலைப் புலிகள் கட்சி அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து இருந்தோம். யுத்தம் முடிவடைந்து 15 ஆண்டுகள் கடந்தும் முன்னாள் போராளிகள் கைவிடப்பட்ட நிலையில் உள்ளனர். தமிழ் அரசியல்வாதிகள் தமக்குள் பதிவிக்காக சண்டை பிடிக்கிறார்களே தவிர முன்னாள் போராளிகள் தொடர்பில் பேசுவதில்லை.*

*எமது முன்னாள் போராளிகளுக்கு உதவி செய்பவர்களும், வெளிநாட்டில் இருந்து எம்மோடு இணைந்து பயணிப்பவர்களும் எம்மை ரணில் விக்கிரமசிங்கவைச் சந்திக்கச் சொன்னார்கள். நாம் சந்தித்து ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து ஜனாதிபதி ரணில் விக்கிரசிங்க அவர்களுடன் பேசியிருந்தோம். இதன் போது எமது கோரிக்களை ஆழ்மனதுடன் ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி, நிச்சயமாக எமது கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக தெரிவித்ததன் பிரகாரம் எமது கட்சி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதாக முடிவெடுத்துள்ளது.*

*ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பல தடவை பிரதமராக இருந்தவர். ஜனாதிபதியாக உள்ளார். சிறந்த ராஜதந்திரி. எமது போராட்ட வரலாறு தெரியும். தற்போது சாரைப் பாம்பு போன்று நாம் உள்ள நிலையில் நாம் தான் பேச வேண்டும். ரணில் விக்கிரமசிங்கவுடன் பேசுவது தான் பொருத்தமானது. அதனால் நாம் அவரை நம்புகிறோம்.*

*வடக்கு கிழக்கில் உள்ள முன்னாள் போராளிகளுக்கு பாதுகாப்பு வேண்டும். வீணாக போராளிகளை அழைத்து விசாரணைகள் என்ற ரீதியில் கைதுகள் மேற்கொள்வதை தவிர்க்க வேண்டும்.*

*வடக்கு கிழக்கில் உள்ள முன்னாள் போராளிகளுக்கு தங்களூடாக உதவித்திட்டங்கள் மற்றும் பொருளாதார ரீதியான செயல்திட்டங்களை மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கைகள் உட்பட ஐந்து கோரிக்கைகளை முன்வைத்துள்ளோம். 3000 பேரின் பெயர் விவரங்களும் வழங்கியுள்ளோம். அவர்களுக்கு முதல் கட்டமாக வேலைத் திட்டங்களை வழங்குவதாக தெரிவித்தார்.*

*ரணில் விக்கிரமசிங்க ஒரு நரி அவரிடமே நாம் பேச்சு செய்தோம் என பாலா அண்ணை சொன்னவர். அந்த வளர்ப்பில் வந்தவர்கள் தான் நாங்கள். அவர் நரியோ, எலியோ, புலியோ, சிங்கமோ பிரச்சினை இல்லை. நாங்கள் அவர் மீது நம்பிக்கை வைத்துள்ளோம். நாங்கள் புலி. அவருக்கு தான் எமது வலி தெரியும். அவருடன் தான் நாம் பேச முடியும். எனவே, தமிழ் மக்களும், முன்னாள் போராளிகளும் சிலின்டர் சின்னத்துக்கு மாத்திரம் புள்ளடியிட்டு ரணில் விக்கிரமசிங்கவை வெற்றியடைய வைக்கவேண்டும் எனத் தெரிவித்தார்.*

*(05 - 100)*

# மத்திய கொழும்பு ஐ.தே.கவின் கோட்டை அதனை ஐ.தே.க. நிச்சயம் வெல்லுமாம்



(ஐ. ஏ. காதிர் கான்)

மத்திய கொழும்பு என்பது, ஐ.தே.கவின் கோட்டை. மத்திய கொழும்பை வெல்ல வைப்பது, கொழும்பு வாழ் மக்களின் கைகளிலேயே தங்கியுள்ளது என, முன்னாள் அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி பைஸர் முஸ்தபா தெரிவித்தார்.

ஐ.தே.கவின் மத்திய கொழும்பு தொகுதிக்கான தேர்தல் பிரசாரக் கூட்டம், கொழும்பு பெரிய பள்ளிவாசலில், ஐ.தே.க. சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்க தலைமையில், நேற்று (சனிக்கிழமை) காலை ஆரம்பமானது.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட பின்னர், ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே பைஸர் முஸ்தபா இவ்வாறு கூறினார்.

அவர் ஊடகங்களுக்கு மேலும் கருத்துத் தெரிவிக்கும்போது-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இனவாதமற்ற ஒரு சிறந்த தலைவர். எல்லா மக்களையும் இனமதபேதமின்றி அரவணைத்துச் செல்லும் ஆளுமையுடையவர்.

பொருளாதார நெருக்கடியில் நாடு அதள பாதாளத்தில் வீழ்ந்து இருந்தபோது, இந்நாட்டை தைரியமாக முன்னின்று பொறுப்பேற்றுக் கொண்ட ஒரு மாபெரும் வீரராகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைக் குறிப்பிடலாம். நாட்டு மக்களையும் வறுமைக் கோட்டிலிருந்தும் இரண்டு வருடங்களுக்குள் படிப்படியாக மீட்டெடுத்த பெருமையும் இவரையே சாரும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சாதுரியம் மிக்க, உயிரோட்டம் உள்ள ஒரு சிறந்த முதுகெலும்புள்ள தலைவர். இவ்வாறான ஒரு தலைவரை, மீண்டும் இந்நாட்டின் ஜனாதிபதியாக மக்கள் தெரிவு செய்வதில் தவறில்லை.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தீர்மானமிக்கது. இத்தேர்தலை மக்கள் தீர்மானமிக்கதாகக் கருதி, ஜனாதிபதியின் கரங்களை மக்கள் ஆணையுடன் பலப்படுத்த வேண்டும்.

ஐ.தே.க., மத்திய கொழும்பின் கோட்டையாக இருப்பதால், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நிச்சயம் வெற்றி பெறுவது திண்ணம்.

இந்நிலையில், மத்திய கொழும்பு வாழ் மக்கள் தமது வாக்குப் பலத்தை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பயன்படுத்தி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மக்கள் ஆணையை வழங்கி, அவரை மீண்டும் ஜனாதிபதி அரியணையில் அமர்த்த முன்வர வேண்டும். - என்றார்.

இதன்போது, முன்னாள் அமைச்சர் ரவிகருணாநாயக்கவும் கருத்துரை வழங்கினார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். பௌஸி, முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினர் பைரூஸ் ஹாஜி, முன்னாள் கொழும்பு மாநகர சபை பிரதி மேயர் முஹம்மத் இக்பால் ஆகியோரும் இந்நிகழ்வில் பங்கு கொண்டிருந்தனர்.(05)

# கூட்டு அமைப்புக்களின் பிரதிநிதிகள் தமிழ்ப் பொது வேட்பாளர் சந்திப்பு





(ஐ.ஏ.காதிர்கான்)

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் சார்பில் பொதுவேட்பாளராகக் களமிறங்கியுள்ள பா. அரியநேத்திரன் பல்வேறு பொது அமைப்புகளின் பிரதிநிதிகளையும் சந்தித்து வருகிறார்.

இதன் ஒரு கட்டமாக நேற்று (சனிக்கிழமை) யாழ். மாவட்டக் கூட்டுறவு அமைப்புகளின் உயர் மட்டப் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். இந்தச் சந்திப்பு நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் சமூக அரசியற் செயற்பாட்டாளர் க. அருந்தவபாலன் தமிழ் மக்கள் பொதுச்சபையைச் சார்ந்த நிலாந்தன் ஆகியோரும் கலந்துகொண்டு தமிழ் பொதுவேட்பாளருக்கு வாக்களிக்கவேண்டியதன் அவசியம் குறித்து உரையாற்றியிருந்தார்கள்.

(05)



காலைக்கதிர் Kalaikkathir


# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com


## எந்த மாற்றமும் இல்லை

அரகலய போராட்டத்தின் பின்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒரு விடயம் தொடர்பில் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார். போராட்டத்தில் கலந்துகொண்ட இளைஞர்கள் முறைமை மாற்றம் குறித்து வலியுறுத்தியதன் காரணமாக பழைய அரசியல் கலாசாரத்தைத் தூக்கி வீசிவிட்டு நாம் புதிய அரசியல் கலாசாரத்திற்குச் செல்லவேண்டும் என்று அவர் வலியுறுத்தி வந்தார்.

அந்தப் புதிய மாற்றத்துக்காக அவர் எந்த முயற்சியையும் எடுக்கவில்லை என்பது ஒருபுறம் இருக்க, பழைய அரசியல் கலாசாரம் தொடராமல் இருப்பதற்கான முயற்சிகளைக்கூட அவர் மேற்கொள்ளவில்லை. அதற்கான சிறந்த உதாரணம் அரசு பணியாளர்களுக்கான சம்பள உயர்வு விவகாரம்.

அரசபணியாளர்களின் எண்ணிக்கை அளவுக்கு அதிகமாக இருக்கின்றது. அதனால் அவர்கள் அரசுக்குப் பெரும் பாரமாக இருக்கின்றார்கள் என்கிற பரப்புரைய ஆளும் தரப்பு முன்னெடுத்து வந்தது. இதனால்அரசபணியாளர்களின்எண்ணிக்கையைக் குறைப்பதற்கும் நடவழக்கை எடுக்கப்பட்டது. புதிய நியமனங்கள் எவையும் வழங்கப்படவில்லை.

இது தவிர, அரச சேவையில் ஆட்களைக் குறைக்கும்நோக்கத்தோடு அரசபணியாளர்களுக்கு 5 வருடங்களுக்கு சம்பளமற்ற விடுமுறை வழங்குவதற்கும் நடவழக்கை எடுக்கப்பட்டது. இந்தச் சலுகையைப் பயன்படுத்தி பலர் அரச வேலையை விட்டு வெளியேறி வெளிநாடுகளுக்கோ, வேறு வேலைகளுக்ககோ சென்றார்கள். அப்பழச் சென்றவர்களின் எண்ணிக்கை கணிசமானது.


ஆனால், இப்போது தேர்தல் நெருங்கியதும் அரச பணியாளர்களுக்கு சம்பள அதிகரிப்பு வழங்கப்படும் என்று அரசுத் தலைவர் உறுதியளிக்கின்றார். அரச பணியாளர்களுக்கான வாழ்க்கைச் செலவுப்பழ அடுத்த ஆண்டு முதல் 25 ஆயிரம் –ரூபாயாக்கப்படும் என்று வாக்குறுதியளிக்கிறார். இதன் மூலம் அரசு ஊழியர்களின் அழப்படைச் சம்பளம் 50 ஆயிரம் ஆக்கப்படும் என்கிறார்.

அரச ஊழியர்களின் வாக்குகளைக் கவர்வதற்காகவே இந்தச் சம்பள அதிகரிப்பு என்பது தெளிவான உண்மை. அதே நேரம் இந்தச் சம்பள அதிகரிப்பை வழங்குவதற்கான பணம் ஆளும் தரப்புக்கு எங்கிருந்து வந்து கொட்டும் என்று தெரியவில்லை. அதுவும்போக அரசுக்குச் சுமையாக இருக்கும் ஊழியர்கள் இப்போது எப்பழ அரசின் ’பெருமை’யாக மாறினார்கள் என்பதும் தெரியவில்லை.

தேர்தல் என்று வந்துவிட்டால் நாட்டுக்கு நன்மையளிக்கும் எந்தவிடயத்தையும் கைவிட்டு வாக்குகளுக்காக எப்பழயும் நடந்துகொள்ளும் அரசியல் கலாசாரத்தைவிட்டு அரசுத் தலைவர் இன்னும் விலகவேயில்லை என்பதையே இது காட்டுகின்றது. புதிய மாற்றம் புதிய கலாசாரம் என்றெல்லாம் அரசுத் தலைவர் வாய் கிழயப்பேசினாலும் கடைசியில் அவரால் பழைய அரசியல் கலாசாரத்தில் இருந்து வெளியே வரவே முழயவில்லை என்பதை நிரூபித்துள்ளார்.

# மாரடைப்புச் சிகிச்சைக்குப் பிறகு என்ன செய்வது?

**கு.கணேசன்**



ஒருமுறை மாரடைப்பு ஏற்பட்டு, அதற்குச் சிகிச்சை பெற்று, உயிர் பெற்றுத் திரும்புகிறவர்களை, எல்லையில் நடக்கும் போரில் வெற்றிபெற்று மறுபடியும் படைக்குத் திரும்பும் வீரர்களுக்கு ஒப்பிடலாம்.

சாவின் விளிம்புக்குச் சென்று திரும்பும் இவர்களுக்கு இறப்புப் பற்றிய பயம் இன்னும் சிறிது காலம் நீடிக்கும். மறுபடியும் மாரடைப்பு ஏற்படுமா என்னும் கேள்வி மனத்தைக் குடையும். இயல்பான வாழ்க்கைக்குத் திரும்ப முடியுமா என்னும் சந்தேகம் அரிக்கும். குடும்பத்தின் முக்கிய பொறுப்புகளைக் கவனிக்கும் சூழ்நிலையில் உள்ளவர்களுக்கு இந்தக் கவலைகள் அவரோடு முடியாது; குடும்பத்தினரையும் தொற்றிக்கொள்ளும்.

மாரடைப்புக்குப் பிறகான வாழ்க்கையை ஒருவர் எப்படி எதிர்கொள்கிறார் என்பதைப் பொறுத்து அவருடைய உடல்நிலையும் மனநிலையும் நலம் பெறும் என்பது பொதுவான விதி. என்றாலும், சின்னச் சின்ன வாழ்க்கை முறை மாற்றங்களால் இவர்கள் தரமான வாழ்க்கையை மறுபடியும் அமைத்துக்கொள்ள முடியும் என்றுதான் நவீன மருத்துவம் நம்பிக்கை தருகிறது.

அதற்கான வழிகள் இவை: (மாரடைப்புக்கு ‘ஸ்டென்ட்’ பொருத்திக்கொண்டவர்கள் மட்டுமன்றி, பைபாஸ் ஆபரேஷன் மேற்கொண்டவர்களுக்கும் இந்த ஆலோசனைகள் பொருந்தும்).

### பொதுவான பரிந்துரைகள்

இதயநலச் சிறப்பு மருத்துவர் பரிந்துரைக்கும் மாத்திரைகளைத் தவறாமல் எடுத்துக்கொள்வது அவசியம். குறிப்பிட்ட கால இடைவெளிகளில் மறு பரிசோதனைகளுக்குச் செல்வது முக்கியம். தேவைப்பட்டால் போகப்போக மருத்துவரின் ஆலோசனைப்படி மாத்திரை அளவுகளைக் குறைத்துக்கொள்ளலாம். சில மாத்திரைகளை நிறுத்திக்கொள்ளலாம். அதை மருத்துவர்தான் முடிவுசெய்ய வேண்டும்.

புகைபிடிப்பது கூடவே கூடாது.

மது அருந்துவதும் ஆகாது.

உயர் குருதி அழுத்தம் இருப்பவர்கள் அதைக் கட்டுப்படுத்தவேண்டும்.

நீரிழிவு நோய் உள்ளவர்கள் அதற்கான மாத்திரை அல்லது இன்சுலின் ஊசி மருந்து மூலம் குருதிச் சர்க்கரை அளவைச் சரியான அளவில் வைத்துக்கொள்ளவேண்டும்.

அதோடு, கொலஸ்டிராலைக் குறைக்கும் மாத்திரைகளையும் எடுத்துக்கொள்ளவேண்டும்.

தினமும் 8 மணி நேரம் உறக்கம் அவசியம்.

### உணவுமுறை

உயர் -குருதி அழுத்தம் இருப்பவர்கள் உப்பைக் குறைக்கவேண்டும்.

சர்க்கரை நோயுள்ளவர்கள் இனிப்பு வகைகளைக் குறைக்க வேண்டும்.

குருதியில் கொலஸ்டிரால் அதிகம் உள்ளவர்கள், அரிசி உணவுகளையும் நிறை கொழுப்பு உணவு களைக் குறைத்து, குருதி கொலஸ்டிராலையும் கட்டுப்படுத்தவேண்டும்.

உணவு மற்றும் உடற்பயிற்சிகள் மூலம் உடல் எடையைச் சீராக வைத்துக்கொள்ளவேண்டியது மிகவும் முக்கியம்.

ஆரோக்கிய உணவுகளுக்கு முக்கியத்துவம் தர வேண்டும். முழுத்தானியங்கள், பழங்கள், காய்கறிகள், நட்ஸ் மற்றும் புரத உணவுகளைச் சாப்பிடுவதில் கவனம் செலுத்துவது நல்லது.

செவ்விறைச்சி வேண்டாம்.

மீன் உணவு நல்லது.

ஊடு கொழுப்பு (Trans fat) உள்ள உணவுகளையும், வெண் சர்க்கரை சேர்க்கப்பட்ட உணவுகளையும், செயற்கை பானங்களையும் தவிர்க்க வேண்டும்.

வீட்டுஉணவுகளுக்குமுக்கியத்துவம்கொடுங்கள்.

பதப்படுத்தப்பட்ட உணவுகளைத் தவிர்க்கப் பாருங்கள்.

எண்ணெய்மிகுந்தஉணவுகளைஓரங்கட்டுங்கள்.

### உடற்பயிற்சிகள்

சிகிச்சை பெற்றுக்கொண்ட ஒரு வாரத்தில் வீட்டிலேயே மேற்கொள்ளக்கூடிய சிறு சிறு உடற்பயிற்சிகளை தொடங்கலாம். ஒரு மாதம் கழிந்தபின் வழக்கமான உடற்பயிற்சிகளை மேற்கொள்ளலாம்.

மிகவும் தீவிரமான உடற்பயிற்சிகளையும் ‘ஜிம்’ போன்ற தசைப்பயிற்சிகளையும் மேற்கொள்ள வேண்டாம்.

5 கிலோ எடைக்கும் அதிகமாகத் தூக்கக்கூடாது.

தினமும் 30 நிமிட நடைப்பயிற்சி செய்ய வேண்டியது அவசியம். குறைந்தது வாரம் 5 நாட்களுக்கு இப்பயிற்சி தேவை.

நடைப்பயிற்சிஅல்லதுஉடற்பயிற்சிசெய்யும்போது நடு நெஞ்சில் வலி வந்தால் மருத்துவ ஆலோசனை பெற வேண்டும்.

### ஸ்டென்ட் வலி

மாரடைப்புக்கு ‘ஸ்டென்ட்’ பொருத்திக்கொண்டவர்களுக்கு உடற்பயிற்சிகளின்போது, இடது பக்க நெஞ்சில் குறிப்பிட்ட இடத்தில் மட்டும் ஊசி குத்துவதுபோன்று லேசான அளவில் வலி வருவதும் போவதுமாக இருக்கும். இதற்கு ‘ஸ்டென்ட் வலி’ (Stent Pain) என்று பெயர். இதற்குப் பயப்படத் தேவையில்லை. இந்த வகை வலி 10 நிமிடங்களுக்கு மேல் நீடிக்கிறது என்றால் மருத்துவ ஆலோசனை பெற்றுக்கொள்வது நல்லது.

### பயணம் எப்போது?

மாரடைப்புக்கு ‘ஸ்டென்ட்’ பொருத்திக்கொண்டவர்கள் இரண்டுவாரங்களுக்குப் பிறகு கார் ஓட்டலாம். பைபாஸ் ஆபரேஷன் மேற்கொண்டவர்கள் எட்டு

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

காலைக்கதிர் Kalaikkathir

# மாரடைப்புச் சிகிச்சைக்குப் பிறகு என்ன செய்வது?

4ம் பக்க தொடர்ச்சி..........

வாரங்களுக்குப் பிறகு கார் ஓட்டலாம். வெளி யூர்களுக்குச் செல்லலாம்.

### தாம்பத்தியம் எப்போது?

மாரடைப்புஏற்பட்டவர்கள்மருத்துவரிடம்கேட்கத்தயங்கும் கேள்வி இதுதான்: ‘மாரடைப்புக்குப் பிறகு தாம்பத்திய உறவு வைத்துக்கொள்ளலாமா?’.

மாரடைப்புக்கு ‘ஸ்டென்ட்’ பொருத்திக் கொண்டவர்கள் சிகிச்சைக்குப் பிறகு ஒரு மாதம் கழித்து தாம்பத்திய உறவு வைத்துக்கொள்ளலாம். அல்லது மூச்சுத் திணறல் இல்லாமல் இரண்டு மாடிகளுக்கு மாடிப் படிகளில் விறுவிறுவென்று ஏற முடிகிறது என்றாலும் தாம்பத்திய உறவுக்கு உடல் தயாராகிவிட்டது என்று அர்த்தம்.

பைபாஸ் ஆபரேஷன் மேற்கொண்டவர்கள் இரண்டு மாதங்கள் கழித்து தாம்பத்திய உறவு வைத்துக்கொள்ளலாம். அல்லது நடுநெஞ்சில் அறுவைப் புண் நன்றாகக் குணமான பிறகு தாம்பத்திய உறவு வைத்துக்கொள்ளலாம்.

‘வயாக்ரா’ போன்ற மாத்திரைகளைப் பயன்படுத்த வேண்டாம். இவை மிகவும் அவசியம் என்றால் இதயநலச் சிறப்பு மருத்துவரின் சம்மதம் தேவை.

### வழக்கமான பணிகள் எப்போது?

‘ஸ்டென்ட்’ பொருத்திக்கொண்டவர்கள் குறைந்தது 6 வார ஓய்வுக்குப் பின் வழக்கமான பணிகளைச் செய்யலாம்; அலுவல் பணிகளையும் செய்யலாம். பைபாஸ் ஆபரேஷன் மேற்கொண்டவர்கள் 8 வாரங்களுக்குப் பிறகு இவற்றை மேற்கொள்ளலாம்.

கடுமையான உடலுழைப்பு தேவைப்படுபவர்கள் மட்டும் இதயநலச் சிறப்பு மருத்துவரின் ஆலோசனைப்படி பணிக்குத் திரும்புவது நல்லது. மிக அரிதாக ஒரு சிலர் மட்டும் தங்கள் பணியை மாற்றிக்கொள்ள வேண்டியதும் வரலாம்.

### காயங்கள் கவனம்

மாரடைப்புச் சிகிச்சைக்குப் பிறகு குருதி உறவைத் தடுக்கும் மாத்திரைகளைத் தொடர்ந்து எடுத்துவருவதால், உடலில் அடிபட்டாலோ, சிறு காயங்கள்பட்டாலோ குருதிக் கசிவு கடுமையாக இருக்கும். ஆகவே, உடனடியாக மருத்துவச் சிகிச்சை எடுத்துக்கொள்ள வேண்டும்.

பெண்கள் ஆனாலும் சரி, ஆண்கள் ஆனாலும் சரி காய்கறி நறுக்குவதில் தொடங்கி நகம் வெட்டுவது வரை கத்தி, பிளேடு. நகவெட்டி போன்றவற்றைக் கவனமாகக் கையாள வேண்டும்.

### அறுவைச் சிகிச்சைக்கு முன்னால்

பல் அகற்றுதல் உள்ளிட்ட சிறு அறுவைச் சிகிச்சை என்றாலும் சரி, பெரிய அறுவைச் சிகிச்சை என்றாலும் சரி, சிகிச்சைக்குச் செல்ல 5 நாட்களுக்கு முன்பு குருதி உறவைத் தடுக்கும் மாத்திரைகள் எடுத்துக்கொள்வதை நிறுத்திக்கொள்ள வேண்டும்.

பொதுவாக, அறுவை சிகிச்சை முடிந்த பிறகு 24 மணி நேரம் கழித்து மறுபடியும் அந்த மருந்துகளை எடுத்துக்கொள்ளலாம். பெரிய அறுவை சிகிச்சை என்றால் மருத்துவரின் ஆலோசனைப்படி எடுத்துக்கொள்ள வேண்டும்.

### தியானம் முக்கியம்

தேவையில்லாமல் பிறருடன் வாக்குவாதம் செய்வதைத் தவிருங்கள். கோபப்படுவது, எரிச்சல் ஏற்படுவது, டென்ஷன் போன்றவை உண்டாகிற சூழ்நிலைகளைத் தவிருங்கள். அடிக்கடி இந்தச் சூழ்நிலைகளுக்கு ஆளாகிற பணிகளில் உள்ளவர்கள் அவசியம் தியானம் செய்யுங்கள்.

### மனநலம்

தனிமையைத் தவிர்ப்பது நல்லது.

குடும்பத்தினருடனும் நண்பர்களுடனும் மனம் விட்டுப் பேசினால், மனம் நலம்பெறும்; பலம் பெறும். தேவையில்லாத பயம் விலகும்.

காப்பீடு உதவும்

இப்போது மாரடைப்புக்கான முன் சிகிச்சை செலவுகள் மட்டுமன்றிபின்சிகிச்சைசெலவுகளும்மிகவும்அதிகமாகிவிட்டன. சாமானிய இந்தியரால் இதைச் சமாளிப்பது கடினம். ஆகவே, மருத்துவக் காப்பீட்டை எடுத்துக்கொள்ளுங்கள். சிகிச்சைக்கான பொருளாதாரச் சிக்கல் வராமல் பார்த்துக்கொள்ளலாம். தொடர் சிகிச்சைக்கு வழி அமைத்துக்கொள்ளலாம். இதன் மூலம் மாரடைப்பிலிருந்து முழுமையாகப் பாதுகாப்பு பெறலாம்.

# திருகோணமலையில் மக்கள் சந்திப்பு.




(எஸ். சினீஸ் கான்)

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரமதாஸவின் வெற்றிக்காக திருகோணமலை மாவட்டத்தில் பக்கிரான்வெட்டை, மாகமாறு மற்றும் மேல்திடல் போன்ற பிரதேசங்களில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் தௌபீக் வெள்ளிக்கிழமை மக்கள் சந்திப்புக்களில் கலந்து கொண்டார்.(05)









கிளிநொச்சியில்

# ஐஸ்வர்யம் பெருவிருந்து மண்டபம்

# Ishwaryam Banquet Hall



Tel:- 021 228 3701, 071 7354308

Whatsapp:- 071 7736 4308

No.315, Kandy Road,
Kilinochchi



- அன்பான வரவேற்பு
- தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
- இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
- இந்தியன் உணவுவகைகள்
- Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.

சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL

## BANQUET MEALS HALL





**FULL OPTION**

### MAIN DIHES

Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style

### DESSERT

| | |
|---|---|
| Ice Cream Cup | - 60/= |
| Fruit Salad | - 60/= |
| I ce Cream & Fruit Salad | - 100/= |
| Cream Caramel | - 120/= |

**SPECIAL MENU PACKAGE**

### BEVERAGES

| | |
|---|---|
| JUICE 200 ml | - 70/= |
| Milk Drink | - 70/= |
| Cocacola M | - 70/= |
| Pepsi M | - 70/= |
| Swahpees Tin | - 250/= |
| Coca Cola Tin | - 250/= |

# கொலை முயற்சி குற்றச்சாட்டில் ஆசிரியைகள் இருவர் கைது

மாணவி ஒருவரை தாக்கி காயப்படுத்தியதாக கூறப்படும் இரண்டுஆசிரியைகள்கைதுசெய்யப் பட்டுள்ளனர் என வென்னப்புவை பொலிஸார் தெரிவித்தனர்.


கொலை முயற்சி மற்றும் கடுமையான தாக்குதல் உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் இந்த இரண்டு ஆசிரியைகளும் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட ஆசிரியை களில் ஒருவர் சம்பவமொன்று தொடர்பில் குறித்த மாணவியை பலமாக தாக்கியுள்ளதோடு மற்றைய ஆசிரியை இந்த மாணவியை வெயிலில் மண்டியிட வைத்து தாக்கியுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதலுக்குள்ளான 15 வயது மாணவி கொழும்பு தேசிய வைத்தியசாலையின் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார் என பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட ஆசிரியைகள் இருவரும் மாரவில நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 2ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.(05)

# பிரதமர் தினேஷ் குணவர்த்தனாவை சந்தித்த முன்னாள் எம்.பி.சந்திரகுமார்



பிரதமர் தினேஸ்குனவர்த்தனவை சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சந்திரகுமார் கொழும்பில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இச்சந்திப்பின்போது இனங்களுக்கிடையில் நம்பிக்கையையும் பரஸ்பரதன்மையையும் சம உரிமையையும் கொண்ட அரசியல் தீர்வின் அவசியம் பற்றியும் சமகால நிலைவரங்கள் மற்றும் ஜனாதிபதி தேர்தல் பற்றியும் கலந்துரையாடப்பட்டன என சமத்துவக் கட்சியினர் தெரிவித்துள்ளனர்.

இதன்போது தமிழ் மக்களின் அரசியல், அன்றாட பிரச்சினைகள், முக்கியமாக நிலம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினைகள் என்பன அடங்கிய மகஜரும் பிரதமரிடம் கையளிக்கப்பட்டது.

(05)

# சஜீத் பிரேமதாசவுக்கே அதிக ஆதரவு இருப்பதால் நாமும் ஆதரவளித்தோம்

## மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிசாத் எம்.பி. சூழுரை




(ஹஸ்பர் ஏ.எச்)

கட்சியின் நிறைவேற்றுக் குழு ஆதரவாளர்களை மாவட்ட ரீதியாக சந்தித்த போது அதிக பட்ச ஆதரவு சஜீத்துக்கே இருந்தது. மாற்றுக் கருத்தும் இருந்தது. ஆனால் அதிக பட்ச ஆதரவு சஜீத்துக்கு இருப்பதால் முடிவுகளை மேற்கொண்டோம் என அகில இலங்கை மக்கள்காங்கிரஸ்கட்சியின்தலைவரும்நாடாளுமன்ற உறுப்பினருமானரிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

கிண்ணியாவில் நேற்று (சனிக்கிழமை) கட்சி பிரமுகர்களுடனான சந்திப்பின் பின் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு இவ்வாறு பதில் அளித்தார்.

தொடர்ந்தும் தெரிவிக்கையில் -

உயர்நீதி மன்றத்தின்உள்ளூராட்சிமன்ற தேர்தல் தீர்ப்பு தொடர்பிலும்தெரிவிக்கையில், தேர்தலை நடத்தாதமை, நியாய மான வேலை அல்ல. ஜனநாயகத்தை மீறுகின்ற செயல். அது கடந்த அரசாங்கத்தால் செய்யப்பட்டது. தவறை திருத்துமாறும் கண்டித்து நீதிமன்றத்தால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. ஆகவே ஜனாதிபதி தேர்தலின் பின் உள்ளூராட்சி மன்ற தேர்தல் நடத்துவதற்கு வாய்ப்பு அதிகமாக உள்ளது. - என்றார்.(05)

# பொலிஸின் கடமைகளுக்கு இடையூறுவிளைவித்த மோட்டார் சைக்கிள் சாரதிக்கு விளக்க மறியல்

பொலிஸாரின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்ததாககைதுசெய்யப்பட்ட மோட்டார்சைக்கிள் சாரதிக்கு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தால் எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

காத்தான்குடிபொலிஸ்நிலையத்தில்கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் வீதி போக்குவரத்து கடமையில் ஈடுபட்டிருந்த நேரம் காத்தான்குடி - கல்முனைபிரதானவீதியில்கையடக்கதொலைபேசியை பயன்படுத்தியவாறு மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்றநபர் பொலிஸாரால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளார்.

இந்த நபர் மீது வழக்குப் பதிவு செய்வதற்காக பதிவுப் புத்தகத்தில் எழுதிக்கொண்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தரை தள்ளிவிட்டு வாக்குவாதத்தில் ஈடுபட்டு அவரது கடமைகளுக்கு இடையூறு ஏற்படுத்த முனைந்துள்ளார்.

இதனையடுத்து வர்த்தகர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோது எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
...ர் பூங்கா
...நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557

பொது மக்களுக்குச் சிரமம்

காலைக்கதிர்
Kalaikkathir

## மூத்தோர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பட்டுள்ள சம்பள முரண்பாட்டு பிரச்சினையையும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இவை பொய்யான வாக்குறுதிகள் அல்ல முன்மொழிவும்திட்டங்களும்ஆகும். பிரேமதாசாக்கள் செய்வதாகச் சொன்ன விடயங்களை செய்யாமல் இருந்ததில்லை. எனது தந்தையான ரணசிங்கபிரேமதாசவின்நாமத்தால் நான் சொல்வதை செய்வேன்.

இவற்றைசெய்வதற்கானபணம் இருக்கின்றது. தேவையற்ற அரச செலவினங்கள் நிறுத்தப்படும். ஜனாதிபதியின் செலவுகள் நிறுத்தப் படும். நான் நாட்டுக்குப் பாரமான ஜனாதிபதியாக இருக்கமாட்டுன். அந்தப்பணத்தின்ஊடாகமக்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்படும். அத்தோடு ஊழலையும் நிறுத்து வோம்.

அமைச்சரவை அமைச்சுகள் என்பது ரோஜா பூக்கள் அல்ல, அவை முட் செடிகள். வங்குரோத்து அடைந்துள்ள நாட்டை வங்க ரோத்து நிலைமையிலிருந்து மீட்டெடுப்பதற்குஅர்ப்பணிப்புடனும் விடாமுயற்சியுடன் செயற்பட வேண்டும்.

ஆளும்தரப்பின் அனைத்து கொடுக்கல் வாங்கல்களையும் டிஜிட்டல்மயப்படுத்தி மக்கள்அறியச் செய்வோம். நாட்டை சீரழித்த அனைவரையும் சட்டத்தின் முன் நிறுத்தி அவர்கள் சூறையாடிய பணத்தை நாட்டுக்குமீளபெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படும். தாம் உள்ளிட்டகுழுவினர்திருடர்களுடன் எந்த டீலையும் வைத்துக்கொள்ள வில்லை.

அரச வங்கிகளில் கடன் பெற்றுக்கொண்டு அதனைச் திருப்பிச்செலுத்தாத செல்வந்தர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் சரியான முறையில் வரியைச் செலுத்த நடவடிக்கைஎடுக்கப்படும். மக்கள் அர்ப்பணிப்புடன் செயல்படுகின்றபோது சமூகத்தில் உள்ள செல்வந்தர்களும் அர்ப்பணிப்புடன்செயற்படவேண் டும். அரசநிதியியல்கொள்கையின் மூலம் தேவையான பணத்தை ஈட்டிக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

தற்போது வறுமை அதிக ரித்து மக்களின் வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. வரிக்கு மேல் வரிவிதித்துவரையறையற்றவிதத்தில் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஆளும்தரப்பின்ஏமாற்றுக்களுக்கு ஏமாறாமல் சர்வதேச நாணய நிதியத்துடன் பேசி மக்களின் எல்லையற்றசுமையைக்குறைத்து, வறுமையைப் போக்குவதற்குச் சிறந்த வேலைத் திட்டங்களை முன்னெடுப்பேன்.

மக்கள் அபிப்பிராயத்தோடு நாடாளுமன்றத்திற்கு வருகை தந்த சிலர் சலுகைகளுக்கும் வரப்பிரசாதங்களுக்கும் சோரம் போய் இருக்கிறார்கள். நம்மிடம் இருக்கின்றஉறுப்பினர்கள்அவ்வாறு பணத்துக்காக சோரம் போகின்ற வர்கள் அல்லர். ஞானம் உள்ள வர்களும் சிறந்த புத்திஜீவிகளும் எம்மோடு இணைந்திருக்கின்றனர் - என்றார்.

## 75 சதவீத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிடையாது. நாட்டையும் ஜனநாயக்தையும் பாதுகாத்த ரணில் விக்ரமசிங்க 70 சதவீத வாக்குகளைப் பெற்று வெற்றி பெறுவார்.

நாடு பின்னடைந்து சுற்றுலா பயணிகள் வருகை தராத நிலை காணப்பட்டது. வெளிநாடுகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு 420 ரூபாவுக்கு டொலரை பெற்று அனுப்பும் நிலை காணப்பட்டது. கடனை மீளச் செலுத்த முடியாமல் வங்குரோத்துநாடாகவெளிநாடுகள் அறிவித்தன. வங்குரோத்து நாடுகளின் கடன் பத்திரங்களை வெளிநாடுகள் ஏற்கவில்லை. அத்தியாவசியப் பொருட்களை வெளிநாடுகளில்இருந்துகொண்டுவர முடியாத நிலை ஏற்பட்டது. வாகன உதிரிப்பாகங்களை இறக்குமதி செய்ய முடியவில்லை.

சர்வதேசநாணயநிதியத்துடன் ஒப்பந்தம் மேற்கொண்டு அதன் நிபந்தனைகளைஏற்றிருக்காவிட்டால் ஆப்கானிஸ்தான், சிம்பாப்வே போன்ற நிலைக்கு நாடு சென்றிருக்கும். 2027 வரை அதே போன்றே ஒப்பந்தத்தை பாதுகாக்காவிட்டால் 2025 வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்க முடியாதநிலைஏற்படும். அஸ்வெசும கொடுப்பனவு கிடைக்காது. அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்க முடியாதநிலைஏற்படும். ஓய்வூதியம் வழங்க முடியாது போகும். ரணில் விக்ரமசிங்க ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தத்தைவிடுத்துசெயற்பட்டால், எந்தவேட்பாளராலும்வரவுசெலவுத் திட்டத்தை முன்னெடுக்க முடியாது போகும்.

2025 வரவு செலவுத் திட்டம் தயாரிப்பதற்கு எவ்வளவு தொகை தேவை என சஜித்தினால் கூற முடியுமா எனச் சவால் விடுகிறேன். ஜனாதிபதி செய்து கொண்ட உடன்படிக்கையை மீறினால் ஒரு மாதத்திலே நாடு மீண்டும் வீழ்ச்சியடையும். அரச ஊழியர்களுக்கு3வருடகாலத்திற்கு தொடர்ச்சியாக 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட இருக்கிறது. சம்பள முரண்பாடு தீர்க்கப்பட்டு அடிப்படை சம்பளம் அதிகரிக்கப்படஇருக்கிறது - என்றார்

## நன்றி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதியாக தெரிவு செய்தமை குறித்து வெட்கித் தலைகுனிந் தேன் - என்றார் இராஜாங்க அமைச்சர்பிள்ளையான்எனப்படும் சிவனேசதுரை சந்திரகாந்தன்.

மட்டக்களப்பில் ரணிலுக்கு ஆதரவு தெரிவித்து நடத்தப்பட்ட பரப்புரைக் கூட்டத்தில் உரையாற் றும்போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறந்த இராஜதந்திரி என்ற வகையிலும் நாம் ஜனாதிபதியை ஆதரித்துள்ளோம். அவரை ஜனாதிபதியாகதெரிவுசெய்வதற்கும் நாம் நாடாளுமன்றத்திலும் உதவி செய்தோம். 2002 இல் புலிகளுடன் போர் நிறுத்தம் செய்யப்பட்ட போது ரணில் விக்ரமசிங்கவே பிரதமராக இருந்தார். அதன் பின்னரே நான் புலிகள் இயக்கத்தில் இருந்து வெளியில் வந்தேன். எதிர்காலத்தில்சாத்தியமானஅதிகாரப் பகிர்வுகளை வழங்கவேண்டும். தேர்தலின் பின்னர் அதனை மேற்கொள்வதாக ஜனாதிபதி உறுதியளித்துள்ளார். அதற்காகவும் அவரை ஆதரிக்கிறோம்.

விவசாயம், மீன்பிடி, கைத்தொழில் துறை சார்ந்ததாக கிழக்கின் அபிவிருத்திக்கு பல திட்டங்களை ஜனாதிபதி முன்மொழிந்துள்ளார். மாகாண சபைக்கு உரிய அதிகாரங்கள் வழங்கப்படும் நிலையில் எமது பிரதேச தந்தையர்களின் கனவு நனவாகும்.

ஜனாதிபதிக்காக வீடு வீடாகச் சென்று வாக்கு சேகரிக்க இருக்கிறோம். ஜனாதிபதியின் வெற்றியில் மட்டக்களப்பு மாவட்ட மக்களும் சிறப்பான வெற்றியைக் காண்பிக்கவேண்டும். மாகாண சபைத் தேர்தல் கட்டாயம் நடத்தப்பட வேண்டும் என்பது தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் கோரிக்கையாகும். எமது வளங்களைப் பயன்படுத்தும் வகையில் அதிகாரப் பகிர்வு மேற்கொள்ளப்படவேண்டும்.

எமதுமக்களுக்குஉரிமைகளைப் பெற்றுத் தர வேண்டும். எமது ஜனாதிபதி பெரும்பான்மை வாக்குகளினால் வெற்றிபெறுவது உறுதி - என்றார்.

## வேட்பாளர்களின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டாவதுஅதிகூடியமாதாந்த வருமானம் பெறும் ஜனாதிபதி வேட்பாளர் சட்டத்தரணி விஜேதாச ராஜபக்ச ஆவார். அவரது மாத வருமானம் 13 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய் ஆகும்.

மூன்றாவது இடத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ச இடம்பிடித்துள்ளார். இவரது மாதாந்த வருமானம் 4 இலட்சத்து 54 ஆயிரத்து 285 ரூபாய் ஆகும்.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச 2 இலட்சத்து 95 ஆயிரத்து 681 ரூபாய் மாதாந்த வருமானத்துடன் இந்தப் பட்டியலில் ஐந்தாவது இடத்தில் காணப்படுகிறார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங் கவின் மாதாந்த வருமானம் ஒரு இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார திஸாநாயக்கவின் மாத வருமானம் 2 இலட்சத்து 56 ஆயிரத்து 802 ரூபாய் என்றும் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவின் மாத வருமானம் 3 இலட்சத்து 17 ஆயிரத்து 786 ரூபாய் என்றும் மக்கள் போராட்டக் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் நுவான் போபகேயின் மாத வருமானம் 3 இலட்சம் ரூபாய் என்றும் கூறப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் வேட்புமனுத்தாக்கல்செய்யும்போது தேர்தல் ஆணைக்குழுவிடம் தமது சொத்துக்கள் மற்றும் கடன்களை சமர்ப்பிக்க வேண்டிய கட்டாயமானது.

## எமக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி வேட்பாளர்களுக்கென விசேட பாதுகாப்புத் திட்டம் அமுல்படுத்தப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி வேட்பாளர்களின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள் ளமைதொடர்பில்விசேடவிசாரணை நடத்தப்பட்டது.

அந்த விசாரணையில் தெரியவந்த தகவலின் அடிப்படை யில் இந்த விசேட பாதுகாப்பு வேலைத்திட்டம் அமுல்படுத்தப்ப டுகின்றது என்று அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆனந்த ரத்நாயக்கவின் ஆலோசனையின் பேரில் ஜனாதிபதி வேட்பாளர்களின் பாதுகாப்பு தொடர்பில் ஆராய்ந்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக விசேட குழுவொன்று அண்மையில் நியமிக்கப்பட்டது.

## சிலிண்டருக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்ற வெற்றிகளைப் பாதுகாத்து முன்னோக்கிச் செல்ல தமது வாக்குகளைப் பயன்படுத்த வேண்டும்.

நான் எதற்காக சுயாதீன வேட்பாளராக களமிறங்குகிறேன். எதற்காக அப்படி செய்கிறேன். உங்களுக்காக போராடவும், உங்களுக்கு சலுகை வழங்கவும், அடுத்த தலைமுறைக்கு நல்ல எதிர்காலத்தை வழங்கும், சரியான பாதையில் நாட்டை கொண்டு செல்லவுமே நான் சுயாதீனமாக களமிறங்கினேன்.

அன்று நாட்டில் வன்முறை தலையெடுத்திருந்தது. அதனை கட்டுப்படுத்த வேண்டி அவசியம் காணப்பட்டது. அதற்காக நான் முன் வந்திருக்காவிட்டால் பங்களாதேஷின் நிலைமையே இலங்கைக்கும் வந்திருக்கும். அந்த நேரத்தில் கட்சி பற்றி சிந்திக்காமல் நாட்டைப் பற்றி சிந்தித்து தீர்மானம் எடுக்க முன்வந்தேன்.

நாட்டில் தற்போது மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறேன். இந்த பணிகள் தொடர வேண்டும். எதிர்கட்சித் தலைவருக்கும் மக்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு உள்ளது. அவர் மாற்று பிரதமருக்கு நிகரானவர். நெருக்கடி வந்தபோது எதிர்க்கட்சித் தலைவர் அந்த பொறுப்புக்களை மறந்து ஓடிவிட்டார்.

நெருக்கடியான காலத்தை நாடு எதிர்கொண்டது. அதிலிருந்துமீண்டு வர கஷ்டமான தீர்மானங்களை எடுக்கவேண்டியிருந்தது. அதற்காக சர்வதேச நாணய நிதியம் மற்றும் கடன்வழங்கிய தரப்பினருடன்பேசி இணக்கப்பாடுகளை எட்டினோம். சில தீர்மானங்கள் மக்களுக்கு சுமையாக அமைந்தன. அதனை பொறுத்துக்கொண்ட மக்களுக்கு நன்றி கூறுகிறேன்.

நாம் அதனைச் செய்திருக் காவிட்டால் நாட்டின் நிலைமை என்னவாகியிருக்கும். நாம் மேற்கொண்ட முயற்சிகள் நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியை அதிகரித்துள்ளது. ரூபாவின் பெறுமதியும்வலுவடைந்திருக்கிறது. சிறுநீரக நோயாளர்களுக்கு நிவாரணம் வழங்கினோம். 24 இலட்சம் பேருக்கு அஸ்வெசும வழங்கினோம். இலசவசமாக அரிசி வழங்கினோம். அடுத்த வருடத்திலிருந்துஅரசஊழியர்களின் வாழ்வாதார கொடுப்பனவு 25 ஆயிரம்ரூபாவாகஅதிகரிக்கப்படும். அதனால் அடிப்படை சம்பளம் 55 ஆயிரமாக உயர்வடையும்.

முதியோரின் நிலையான வைப்புக்களுக்கு 10 சதவீத வட்டி வழங்குகிறோம். பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கினோம். வங்குரோத்து அடைந்திருந்த நாட்டிலேயே இவற்றைச்செய்தோம். மூடிக்கிடந்த பாடசாலைகளை மீள ஆரம்பித்தோம். 'உறுமய' திட்டத்தின் கீழ் 20 இலட்சம் பேருக்கு காணி உறுதி வழங்குவோம். தேர்தல் காரணமாக அந்த திட்டம் நிறுத்தப்பட்டுள்ளது. அடுத்த வருடம் மீள ஆரம்பிக்கப்படும்.

தேவையானபயிற்றுவிக்கப்பட்ட தொழில் படையை உருவாக்க வேண்டும். திருகோணமலை அபிவிருத்தி செய்யப்பட்டு முதலீட்டு வலயங்களை அமைப்போம். நெல் உற்பத்தி அதிகப்படுத்தப்படும். விவசாயத்தை நவீனமயப்படுத்துவோம். பொருட் களின் விலையை பெருமளவில் குறைத்திருக்கிறோம். குறிப்பாக கேஸ் விலை குறைந்துள்ளது. அதனாலேயேசிலிண்டர்சின்னத்தை தெரிவு செய்தேன்.

இந்த நாட்டை அபிவிருத்தி செய்ய 18 நாடுகள் கால அவகாசம் வழங்கியுள்ளன. இதனை முன்னோக்கி கொண்டு செல்வோம். ஐக்கியமக்கள்சக்தியும், தேசியமக்கள் சக்தியும் வரிகளை நீக்க போவதாக கூறுகிறார்கள். அவ்வாறு செய்தால் 2022 இன் நிலைமைக்கு நாம் மீண்டும் செல்ல வேண்டியிருக்கும்.

தேர்தல் நடத்த எதிர்க்கட்சிகள் கோரின. மக்கள் வாழ்க்கையைக் குழப்புவதே எதிர்கட்சியினருக்கு தேவையாகவுள்ளது. எனக்குஎதிராக நீதிமன்ற தீர்ப்பை பெற்றுள்ளனர். மக்களுக்காக எதையும் செய்வேன். செப்டெம்பர் 21 சிலிண்டர் சின்னத்துக்கு வாக்களியுங்கள். இல்லாவிட்டால் எதிர்காலத்தில் கேஸ் இல்லை என்று கவலைப்பட நேரிடும் - என்றார்.

# பேராயரைச் சந்தித்த விஜயதாச

ஜனாதிபதிவேட்பாளர்விஜயதாஸ ராஜபக்ச கத்தோலிக்கத் திருச்சபைப் பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் தைச் சந்தித்து தேர்தல் தொடர்பில் கலந்துரையாடியுள்ளார்.

கொழும்பிலுள்ளபேராயர்இல்லத் தில் வெள்ளிக்கிழமை இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. உயிர்த்தஞாயிறுகுண் டுத் தாக்குதலுக்கான நீதியை வழங் கும் பொருட்டு தன்னால் முன்னெடுக் கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் ஜனாதிபதி வேட்பாளர் விஜயதாஸ பேராயருக்கு விளக்கமளித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குத லுக்கான நீதியை பெற்றுக்கொடுக்க தொடர்ந்தும் நடிவக்கை எடுப்பதாகவும் அவர் பேராயரிடம் தெரிவித்தார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



## சட்டவிரோத மதுபனங்களுடன் வெயாங்கொடையில் ஒருவர் கைது

வெயாங்கொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நய்வல பிரதேசத்தில் 60 லீற்றர் சட்டவிரோத மதுபானத்துடன் சந்தேகநபர் ஒருவர் களுத்துறை பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

களுத்துறை பொலிஸ் குற்றப்புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்ததகவலின்பேரில்மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

திவுலப்பிட்டிய பிரதேசத்தை சேர்ந்த34வயதுடையநபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இதனையடுத்து, சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக வெயாங்கொடை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளைவெயாங்கொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

## இந்திய சித்த மருத்துவ சொற்பொழிவாளர் யாழில்

இந்திய சைவத்தமிழ், சித்த மருத்துவ சொற்பொழிவாளர் இறை நெறி இமயவன் சிவகுருநாதன் யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் அடுத்த மாதம் இரண்டாம் திகதி வரை தங்கிநின்று சொற்பொழிவு ஆற்ற உள்ளார்.

இவர் தென்மராட்சி உசன் மிருசுவிலில்அமைந்துள்ளதெய்வத்தன் காளி அம்மன் ஆலயத்தில் நடைபெறும்திருக்குடமுழுக்குநிகழ்வின் பங்கு கொள்ள இந்தியாவில் இருந்து வருகை தர உள்ளார்.

இவர் யாழ்ப்பாணத்தில் தங்கி இருக்கும் காலத்தில் சைவ ஆலயங்கள், நிறுவனங்களில்சைவ தமிழ்சொற்பொழிவு,சித்தமருத்துவ சொற்பொழிவு போன்றவற்றை நடத்த உள்ளதால் ஒழுங்குபடுத்த விரும்பும் நிறுவனங்கள் மூலிகை சுகவாழ்வு நிறுவனத்தின் சைவ சித்தாந்த மையத்தில் சைவப் புலவர் ,சைவ சித்தாந்த பண்டிதர் வெற்றிவேல் சக்திவேல் உடன் 0755327067 என்னும் தொலைபேசிஇலக்கத்துடன்தொடர்பு கொண்டு சொற்பொழிவுகளை ஒழுங்குபடுத்தலாம்.(05)

## கல்கிசையில் மசாஜ் நிலைய போர்வையில் விபச்சார விடுதி

### 4 பேர் கைது

கல்கிசையில் மசாஜ் நிலையம் என்ற போர்வையில் இயங்கி வந்த விபச்சார விடுதியொன்றிலிருந்து நான்கு பெண்கள் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர் என கல்கிசைபொலிஸ்குற்றப்புலனாய்வு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கல்கிசை பொலிஸ் குற்றப்புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்டசுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாணந்துறை, அநுராதபுரம், மாத்தளை மற்றும் கினிகத்தேனை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 25,34 மற்றும் 40 வயதுடைய நான்கு பெண்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதனையடுத்துசந்தேகநபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக கல்கிசை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்கிசை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)



# இன்று விவேகானந்த பூங்கா திறப்பு விழா நான்கு சுவாமிகளின் சிலைகளும் திறப்பு

(வி.ரி. சகாதேவராஜா)

மட்டக்களப்பு, புதுக்குடியிருப்பில் அழகாக அமைக்கப்பட்டுள்ள சுவாமி விவேகானந்த பூங்கா இன்று (ஞாயிற்றுக்கிழமை) காலை 9 மணிக்கு திறந்து வைக்கப்படும்.

இராமகிருஷ்ண மிஷனை ஸ்தாபித்த வீரத்துறவி சுவாமி விவேகானந்தரின் 70 அடி உயர சிலை முதலில் திறந்து வைக்கப்படும்.

பின்னர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகள் சேவையின் சின்னம் சுவாமி நடராஜானந்தர் கர்மயோகி சுவாமி ஜீவனானந்த ஜீ ஆகியோரின் திருவுருவச் சிலைகள் ஏக காலத்தில் சுவாமிகளால் திறந்து வைக்கப்படும்.

திறப்பு விழாவில் பிரதம அதிதியாக தஞ்சாவூர் இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி விமூர்தானந்தஜி மஹாராஜ் கலந்து சிறப்பிப்பார்கள்.

இந்நிகழ்வு ஸ்தாபக தலைவர் க. சற்குணேஸ்வரன் தலைமையில், இலங்கைக்கான இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மானந்த ஜீ மகராஜ் முன்னிலையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஸ்ரீமத் சுவாமி விமூர்தானந்தஜி மஹாராஜ் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜே.முரளிதரன் ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்து கொண்டு நிகழ்வைச் சிறப்பிக்கவுள்ளனர்.

மேலும் இலங்கை இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மானந்த ஜீ மகராஜ், கொழும்பு சுவாமி இராஜேஸ்வரானந்தா ஜீ மகராஜ், மட்டக்களப்பு கல்லடி ஆச்சிரம பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ், உதவி பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி சுர்ச்சிதானந்த ஜீ மகராஜ், சுவாமி மாத்ருசேவானந்தர் ஜீ மகராஜ் ஆகியோர் சிலைகளை திறந்து வைப்பார்கள்.

(05)

# வெள்ளவத்தை கடற்கரை பகுதியில் ஆணின் சடலம்

கொழும்பு, வெள்ளவத்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கடற்கரை பகுதியில் வெள்ளிக்கிழமை பிற்பகல் ஆணொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என வெள்ளவத்தை பொலிஸார் தெரிவித்தனர்.

வத்தளை பிரதேசத்தைச் சேர்ந்த 63 வயதுடைய நபரொருவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் வெள்ளவத்தை பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.(05)

# ஓகஸ்டில் 2,400 இற்கும் மேற்பட்ட டெங்கு நோயாளர்கள் பதிவாம்

ஓகஸ்ட் மாதத்தில் இதுவரை 2,400இற்கும் மேற்பட்ட டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

மேல் மாகாணம் மற்றும் கண்டி மாவட்டத்திலேயே அதிகளவான நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு மேலும் தெரிவித்துள்ளது .(05)

# லிந்துலையில் சிறுவனை சித்திரவதைக்கு உட்படுத்திய சிறிய தாய் ஒருவர் கைது

லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வளஹா தோட்டத்தில் வசிக்கும் 10 வயது சிறுவனொருவன் தனது சிறிய தாயாரினால் கடந்த சில தினங்களாக கொடூர சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சிறுவன் சிறிய தாயாரினால் அடிக்கப்பட்டு மோசமான சித்திரவதைகளை அனுபவித்துள்ளதாகவும் அதனை விசாரித்து அறிந்த பாடசாலை சமூகம் லிந்துலை பொலிஸ் இணையத்தில் முறைப்பாடு செய்ததை தொடர்ந்து இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

சித்திரவதைக்கு உள்ளான சிறுவன் லிந்துலை பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச் சைகளுக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு வெள்ளிக்கிழமை மாற்றப்பட்டுள்ளார்.

அதேவேளை சிறுவனின் சிறிய தாயாரை வரவழைத்து பொலிஸார் விசாரணைகளுக்கு உட்படுத்தியுள்ளனர். விசாரணைகளை தொடர்ந்து அந்த பெண் லிந்துலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, நேற்று (ஞாயிற்றுக்கிழமை) நுவரெலியா மாவட்ட நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக லிந்துலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட பெண் ஒரு குழந்தையின் தாய் என்பதோடு, தற்போது அவர் ஒரு கர்ப்பிணிப் பெண் எனவும் கூறப்படுகிறது.

அத்தோடு, கொடூர சித்திரவதைக்கு உள்ளான சிறுவனின் தாய் கொழும்பில் பணியாற்றி வருவதும், அவர் தனது மகனை சிறுவனின் சிறிய தாயாரிடம் பாதுகாப்புக்காக விட்டுச் சென்றுள்ளமையும் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இந்த சிறுவன் இவ்வருடம் நடைபெறவிருக்கும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றவுள்ள, நாகசேனை பகுதியில் உள்ள பிரபல பாடசாலையொன்றில் கல்வி கற்று வரும் மாணவன் என்பதும் குறிப்பிடத்தக்கது. (05)

# ஹிக்கடுவை துப்பாக்கிச்சூட்டு முயற்சி; மற்றும் ஒரு சந்தேகநபர் கைதானார்

ஹிக்கடுவை பிரதேசத்தில் உள்ள சுற்றுலா ஹோட்டல் ஒன்றிற்கு அருகில் கடந்த 14 ஆம் திகதி ஓட்டோ சாரதி ஒருவரை சுட்டுக் கொலை செய்ய முயன்ற சம்பவத்துடன் தொடர்புடைய மற்றுமொரு சந்தேகநபர் கடந்த 22 ஆம் திகதி கைது செய்யப்பட்டுள்ளார் என ஹிக்கடுவை பொலிஸார் தெரிவித்தனர்.

ஹிக்கடுவை பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் தொடந்துவ பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

தொடந்துவ பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதுடைய நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹிக்கடுவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

ஹிக்கடுவை நகரத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றிற்கு அருகில் கடந்த 14 ஆம் திகதி மோட்டார் சைக்கிளில் சென்ற இரு துப்பாக்கிதாரிகள் அங்கிருந்த ஓட்டோ சாரதி ஒருவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்த முயன்றுள்ள நிலையில் துப்பாக்கி செயலிழந்ததால் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கு வைக்கப்பட்ட ஓட்டோ சாரதி அங்கிருந்து தப்பிச் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(05)

# 500 மாணிக்கக் கல், 100 வெள்ளி மோதிரம் வர்த்தகரின் வீட்டிற்குள் நுழைந்து திருட்டு

வெல்லம்பிட்டி பிரதேசத்தில் உள்ள வர்த்தகர் ஒருவரின் வீட்டிற்குள் நுழைந்து 500 மாணிக்கக் கற்கள் மற்றும் 100 வெள்ளி மோதிரங்கள் திருடிச் சென்றுள்ளதாக வெல்லம்பிட்டி பொலிஸ் நிலையத்திற்கு முறைப்பாடு ஒன்று கிடைத்துள்ளது.

வெள்ளி மோதிரங்கள் மற்றும் தங்க நகைகளைத் தயாரிக்கும் வர்த்தகர் ஒருவரின் வீட்டிலேயே இந்த திருட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

இந்த வர்த்தகர் கடந்த 11 ஆம் திகதி திருகோணமலை பிரதேசத்தில் உள்ள தனது உறவினர் ஒருவரின் திருமண நிகழ்விற்குச் சென்று கடந்த 21 ஆம் திகதி மீண்டும் வீடு திரும்பியுள்ளார்.

இதன்போது, வீட்டிற்குள் இருந்த பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளதை அறிந்து கொண்ட வர்த்தகர் இது தொடர்பில் வெல்லம்பிட்டி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ளார்.

இந்த மாணிக்கக் கற்கள் அனைத்தும் 07 பெட்டிகளில் வைக்கப்பட்டிருந்துள்ளதாகவும் திருடப்பட்ட பொருள்களின் மொத்த மதிப்பு பல லட்சம் ரூபா எனவும் இந்த முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# கஜமுத்துடன் இளைஞன் பண்டாரவளையில் கைது

பண்டாரவளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கெபெல்லேவெல பிரதேசத்தில் கஜமுத்துடன் இளைஞன் ஒருவர் பண்டாரவளை பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பண்டாரவளை பொலிஸ் குற்றப்புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நமுனுகுல பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞன் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இதனையடுத்து, சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக பண்டாரவளை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பண்டாரவளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.
(05)

# ரவூப் ஹக்கீம், முனாபிக் தனம் பற்றி கதைப்பதற்கு தகுதியற்றவரே நஷீர்!

## சட்டத்தரணி ஹபீப் றிபான் சாட்டை




(கே எ ஹமீட்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினூடாக தனக்கான ஓர் அரசியல் முகவரியை பெற்று தனது சுய இலாபத்திற்காக சமூக சிந்தனையின்றி சோரம் போன நஷீர் அஹமட், எமது பேரியக்கத்தின் தேசியத் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் பற்றியும் அதன் பிரதித் தலைவர் ஹிஸ்புல்லாஹ் பற்றியும் பேசுவதற்கு தகுதியற்றவர் எனத் தெரிவித்தார் கட்சியின் கல்குடா தொகுதி அமைப்பாளரும் உயர்பீட உறுப்பினருமான சட்டத்தரணி ஹபீப் றிபான்.

இன்று ஏறாவூரில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலுக்கான கூட்டத்தில் நஷீர் அஹமட், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் ஒரு பொட்டணி வியாபாரி என்றும் அதன் பிரதித் தலைவர் ஹிஸ்புல்லாஹ் ஒரு முனாபிக்' என்றும் பேசியிருந்தார். அதற்கு பதிலளிக்கும் அறிக்கையாகவே இதனை சட்டத்தரணி ஹபீப் றிபான் வெளிப்படுத்தியிருந்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் -

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற பேரியக்கத்தின் முதுகில் ஏறி மாகாண சபை உறுப்பினர், முதலமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர் என்ற பதவிகளூடாக அரசியல் அந்தஸ்தை பெற்று அதன்காரணமாகவே இன்று ஆளுநராக இருக்கும் அவர் கட்சியையும் அதன் தலைமைகளையும் விமர்சிப்பதற்கு தகுதியற்றவர்.

மேலும் மக்கள் மிக அவதானத்துடன் சிந்தித்து இன்ஸா அல்லாஹ் வெற்றிபெறக்கூடிய வெற்றி வாய்ப்பைப்பெறக்கூடிய சஜீத் பிரேமதாச அவர்களுக்கு வாக்கை அளித்து எமது ஒற்றுமையை வெளிப்படுத்த வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். (05)

# பாணந்துறையில் நான்கு வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி கோர விபத்து

## மூவர் காயம்



பாணந்துறை பிரதேசத்தில் மணிக்கூண்டுக்கு அருகில் நான்கு வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி இடம்பெற்ற விபத்தில் மூன்று பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து வியாழக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

கார் ஒன்று வீதியில் பயணித்த இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வான் ஒன்றுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தின் போது, மூன்று பேர் படுகாயமடைந்துள்ள நிலையில் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

(05)

காலைக்கதிர் Kalaikkathir

### பல்கலை மாணவ தூதர்களுக்கான

# நியமனக் கடிதங்கள் வழங்கலும் சிறுவர் பாதுகாப்புப் பயிற்சியும்





(நூருல் ஹுதா உமர்)

தேசியசிறுவர்பாதுகாப்புஅதிகாரசபையால் பல்கலைக்கழக மாணவ தூதுவர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வும் சிறுவர் பாதுகாப்பு குறித்த பயிற்சி பட்டறையும் தென்கிழக்கு பல்கலைக்கழக கலை கலாசார பீட கேட்போர் கூடத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

தென்கிழக்கு பல்கலைக்கழக பாலின சமத்துவம் மற்றும் சமத்துவத்திற்கான நிலையத்தின் தலைவியும் மாணவ தூதுவர்களுக்கானதேசியவேலைத்திட்டத்தின் தென்கிழக்குபல்கலைக்கழகஇணைப்பாளரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான ஏ.டபிள்யூ .என். நளீபாவின் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக பதில் உபவேந்தர் கலாநிதி யூ.எல் அப்துல் மஜீத் கலந்துகொண்டார்.

நிகழ்வில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் சார்பில் பணிப்பாளர் சானிக மலல்கொட, அதிகாரசபையின் உதவிப் பணிப்பாளர் திருமதி லக்ஷிகா மாணிக்போவ, ஊடக சி.டி மற்றும் தகவல் உத்தியோகத்தர் தனுஷ்க சேனாரத்ன, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் மாவட்ட சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் போன்றோர் பங்கு கொண்டனர்.

நிகழ்வில் சிரேஷ்ட பேராசிரியர் எம்.ஐ.எம். கலீல், சமூகவியல்துறைதலைவர் பேராசிரியர் எஸ்.எம். ஐயூப், புவியியல் துறை தலைவர் கே. நிஜாமிர் உள்ளிட்ட விரிவுரையாளர்கள் மற்றும் சிரேஷ்ட உதவி பதிவாளர் எம்.ரீ. அஷ்ஹர், மாணவ தூதுவர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.(05)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.08.2024இல் வெளியிடப்பெற்றது